**கவனிக்க.**-2024.06.07 ஆந் திகதிய இல. 2388 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2389 - 2024 ජූනි මස 14 වැනි සිකුරාදා - 2024.06.14

2389 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1442 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1453 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | 1456 |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1444 | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1451 | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2024, யூலை மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, யூன் மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

1441 - B 082579 - 5,403 (2024/06)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம்**

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

ஆர்வ வெளிப்பாடு (EOI)

*சர்வதேச போட்டி ரீதியிலான விலைமனு*

| *திகதி* | *2024.05.19.* |
|---|---|
| தலைப்பு: | வர்த்தக மையங்களாக கொழும்பு நகரில் பிரதான இரயில் நிலைய கட்டிடங்களை வடிவமைத்தல், கட்டுமானம், நிதி, நடவடிக்கை மற்றும் பராமரிப்புக்காக (DBFOM) பெறுகைக்கான முன்மொழிவு கோரிக்கை (REP) |
| முன்மொழிவை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி: | *2024.07.15, 14.00* மணி ( இலங்கை நிலையான நேரம்) |

*01. அரச தனியார் கூட்டாண்மை (PPP) ஏற்பாடு ஒன்றில் வர்த்தக மையங்களாக கொழும்பு நகரில் பிரதான ரயில் நிலைய கட்டிடங்களை வடிவமைத்தல், கட்டுமானம், நிதி மற்றும் நடவடிக்கைக்காக ( DBFO) தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சினால் ( தொழில் வழங்குநர்) முத்திரை பொறிக்கப்பட்ட முன்மொழிவுகள் கோரப்படுகின்றன. ஒப்பந்தம் ஆரம்பத்தில் குறைந்தது முப்பது ( 30) ஆண்டுகளாகும்.*

***திட்டத்தின் கண்ணோட்டம்***

*அடையாளம் காணப்பட்ட வளாகங்களில் கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, தெஹிவளை, கல்கிசை மற்றும் கொம்பனித்தெருவில் அமைந்துள்ள இரயில் நிலையங்கள் உட்படுவதோடு இவை அனைத்தும் தினசரி 100 இரயில்கள் ஊடாக 10,000 பயணிகள் செல்லும் நாட்டின் பிரதான வர்த்தக மையப் பகுதியில் அமைந்துள்ளன. அடையாளம் காணப்பட்ட ஆறு நிலையங்களுக்கு வெளியே உள்ள நிலையங்களுக்கான முன்மொழிவுகளையும் ஆர்வமுள்ள தரப்பினர் சமர்ப்பிக்கலாம்.*

இந்த அடையாளம் காணப்பட்ட நிலையங்களை நவீன வர்த்தக மற்றும் சமூக மையங்களாக மேம்படுத்துவது, பயணிகளின் வசதியை அதிகரிப்பது மற்றும் வளாகத்தின் வசதிகளை அதிகரிப்பதன் மூலம் கிடைக்கும் அனுபவம் மற்றும் நகர்ப்புற சமூகத்தை தரமான வாழ்வுக்கு மாற்றும் எதிர்பார்ப்பை கொண்டுள்ளது.

இலங்கை புகையிரத சேவை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு, இலாபகரமான வருமானம் மற்றும் கொழும்பின் பெருநகரத்திற்கு நிலையான நகர்ப்புற அபிவிருத்தியைக் கொண்டு வரும் ஒரு கூட்டாண்மைக்கு இந்த முக்கிய முயற்சியின் ஒரு பகுதியாக இடம்பெற உங்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

**வேலைகளின் நோக்கம்**

வர்த்தக மையங்களாக கொழும்பு நகரில் பிரதான இரயில் நிலைய கட்டிடங்களை வடிவமைத்தல், கட்டுமானம், நிதி, நடவடிக்கை மற்றும் பராமரிப்புக்கு (DBFOM) அரச தனியார் கூட்டாண்மையை வெற்றிகரமாக செயற்படுத்தும் நோக்கில் பரந்த அளவிலான செயற்பாடுகள் மற்றும் பொறுப்புகளை இந்த நோக்கம் உள்ளடக்கியுள்ளது. தவிர,

1. வடிவமைப்பு மற்றும் திட்டம்: விலைமனுதாரர் அபிவிருத்திக்கான கருத்தியல் வடிவமைப்பு ஒன்றை வழங்குதல் வேண்டும்.
2. நிர்மாணம்/ அபிவிருத்தி: நிர்மாண செயற்பாடுகளுக்காக சுருக்கமான முறைமை அறிக்கை ஒன்று
3. நடவடிக்கை மற்றும் பராமரிப்பு: முகாமைத்துவம், பராமரிப்பு உட்பட, எதிர்பார்க்கப்படும் நடவடிக்கை பணிகளை விபரித்தல் மற்றும் திட்டம் அல்லது சேவைகள் செயல்பட்டதும், அவற்றின் வழக்கமான செயல்பாடுகள்.
4. நிதி: முதலீட்டு தேவைகள், நிதியளிப்பு வடிவங்கள் அல்லது தனியார் கூட்டாண்மையாளரிடம் இருந்து எதிர்பார்க்கப்படும் நிதி பங்களிப்பு உட்பட நிதி பொறுப்புகளை வரையறுத்தல்.

5. இணக்கம் மற்றும் தரநிலைகள்: விலைமனுதாரர்கள் ஒவ்வொரு நிலைய இடங்களுக்காகவும் வெவ்வேறு முன்மொழிவுகளை சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுவதோடு குறித்த திட்ட முன்மொழிவுகள் தற்போதுள்ள நிலத்தின் அடிப்படையில் ஒவ்வொரு நிலைய நிலத்திலும் சாத்தியமான மேம்பாடு பற்றிய விபரங்கள் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையால் செயற்படுத்தப்படும் கட்டிட ஒழுங்குமுறைகள் மற்றும் ஏனைய பொதுவான மற்றும் கீழ் தரப்பட்டுள்ள வடிவமைப்பு வழிகாட்டல்களுக்கு இணங்கியதாக இருத்தல் வேண்டும்.

02. ஆர்வ வெளிப்பாட்டு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறு சர்வதேச போட்டிரீதியான விலைமனு அனைத்து விலைமனுதாரர்களுக்கும் திறந்திருக்கும்.

03. பின்வரும் முக்கிய தகைமைகளுடனான தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் மாத்திரம் இந்த விலைகேட்பில் பங்கேற்றல் வேண்டும்:

(i) இந்த பெறுகையில் பங்கேற்பதற்கு விலைமனுதாரரின் நிதி மற்றும் தொழில்நுட்ப திறன் நிரூபிக்கப்படல் வேண்டும்.

04. ( ஆங்கில மொழியிலான) ஆர்வ வெளிப்பாட்டு ஆவணங்களை பரீட்சிப்பது மற்றும் வாங்குதவற்கு மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பெறுவதற்கு தொடர்பு கொள்ளவும்:

திரு. விமுக்தி பதிரண,
உதவி அத்தியட்சகர் ( வர்த்தகம்)- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்.

இலங்கை புகையிரத திணைக்களம்,
த.பெ.இல. 355, கொழும்பு-10,
தொலைபேசி: 0775647201, 0114600152,
மின்னஞ்சல்: vimukthipathirana.sir@gmail.com
இணையத்தளம்: www.railway.gov.lk

1. இலங்கை ரூபா பத்தாயிரம் ( இலங்கை ரூபா 10,000.00) மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி 2024.05.20 ஆந் திகதி தொடக்கம் 2024.07.12 ஆந் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் 9.00 மணி மற்றும் 15.00 மணிக்கு இடையே (உள்ளூர் நேரம்) 05 ஆவது பந்தியின் கீழுள்ள முகவரிக்கு எழுத்துமூலம் விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான ஆர்வ வெளிப்பாட்டை வாங்க முடியும் என்பதோடு மேலும் நீடிப்புகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

05. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு இலங்கை, பத்தரமுல்லை, செத்சிறிபாய கட்டம் II, 7 ஆவது மாடி, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு அலுவலகத்தில் 2024. 06.10 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.

06. முன்மொழிவை 2024.07.15 ஆந் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

தலைவர், அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தை குழு,(CANC),
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,
7 ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் II,
பத்தரமுல்லை, இலங்கை.

07. விலைமனுதாரர் தமது முன்மொழிவுகளை தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதுடன் தொடர்புபட்ட அனைத்து செலவுகளையும் ஏற்றல் வேண்டும் என்பதோடு, விலைக்கேட்பு நடைமுறையின் நடத்தல் மற்றும் முடிவு எவ்வாறு அமைந்தபோதும் , அந்த செலவுகளுக்கு தொழில்வழங்குநர் கடப்பாடு அல்லது பொறுப்பேற்காது.

தலைவர்,
அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு,

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு,
7 ஆவது மாடி, செத்சிறிபாய கட்டம் II, பத்தரமுல்லை, இலங்கை.

குறியீட்டு இல.: SRS/ F. 8023.

06- 110

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்- பொத்துவில்

அரசுடமையாக்கப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத சான்றுப் பொருட்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

இந் நீதிமன்றத்தில் வழக்குகளுடன் தொடர்புடைய சான்றுப் பொருட்கள் என முன்வைக்கப்பட்ட பொருட்களில் அரசுடமையாக்கப்பட்ட மற்றும் உரிமை கோரப்படாத பின்வரும் பொருட்கள் 2024.06.29 ஆந் திகதி மு.ப. 9.30 மணியிலிருந்து பொத்துவில் நீதிமன்ற வளாகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

இதில் கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் சம்பந்தமாக யாராயினும் உரிமை கோருவாராயின், ஏல விற்பனை ஆரம்பிக்கப்பட முன்னராக அதன் உரிமையாளர் தமது உரிமைக்கோரிக்கையை முன் வைக்க முடியும்.

ஏல விற்பனைக்கெனத் தீர்மானிக்கப்பட்ட பொருட்களை ஏல விற்பனை நடைபெறும் தினத்தில் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னராக நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியைப் பெற்றுப் பார்வையிட முடியும்.

நீதிமன்றினால் தீர்மானிக்கப்பட்ட ஆகக் குறைந்த மதிப்பீட்டுத் தொகை எட்டப்படாத சந்தர்ப்பத்தில் நீதிமன்றின் தற்றுணிபின் பிரகாரம் அந்தப் பொருட்களை ஏல விற்பனையிலிருந்து விலக்கிக் கொள்வதற்கு நீதிமன்றிற்கு அதிகாரம் உள்ளது.

ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படும் பொருட்களை அவ்விடத்திலேயே பணத்தைச் செலுத்தி அதே தினம் நீதிமன்ற வளாகத்திலிருந்து பொருட்களை எடுத்துச் செல்வதுடன் பணமாக மட்டுமே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏல விற்பனையின் போது பொருட்களைக் கோருபவர் தனது விபரத்தை உறுதிப்படுத்துமுகமாக தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

M.K.M. ஹில்மி ,
மாவட்ட நீதிபதியும் நீதிவானும்.

மாவட்ட /நீதிவான் நீதிமன்றம்,
பொத்துவில்,
2024,மே 30.

**பொத்துவில் மாவட்ட/நீதிவான் நீதிமன்றில் 2024.06.29 ஆந் திகதி பகிரங்க ஏல விற்பனை செய்யப்படுகின்ற பொருட்களின் விபரம்**

| தொடர் இலக்கம் | வழக்கிலக்கம் | | பொருள் விபரம் | எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| 1. | S/115 | F | 2022 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 2. | 26722 | MT | 2019 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3. | AR/7691 | PC | 2023 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 4. | 27023 | PC | 2019 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 5. | 28776 | MT | 2020 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 6. | 30964 | MT | 2021 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 7. | S/227 | F | 2023 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 8. | AR/8044 | PC | 2024 | துவிச்சக்கர வண்டி | 01 |
| 9. | 33519 | PC | 2024 | சவள் | 01 |
| 10. | S/499 | PC | 2024 | சவள் | 01 |
| 11. | 29949 | PC | 2021 | சவள் | 01 |
| 12. | 33478 | PC | 2024 | சவள் | 02 |

| தொடர் இலக்கம் | வழக்கிலக்கம் | | பொருள் விபரம் | எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| 13. | 33545 | PC | 2024 | சவள் | 01 |
| 14. | 33561 | PC | 2024 | சவள் | 01 |
| 15. | 33584 | PC | 2024 | சவள் | 01 |
| 16. | 33703 | PC | 2024 | சவள் | 04 |
| 17. | 12812 | - | 2011 | கத்தி | 01 |
| 18. | 30759 | F | 2021 | கத்தி | 01 |
| 19. | 29206 | F | 2020 | கத்தி | 01 |
| 20. | 21181 | F | 2015 | கத்தி | 01 |
| 21. | S/36 | F | 2023 | கத்தி | 01 |
| 22. | 28468 | F | 2020 | கத்தி | 01 |
| 23. | S/42 | F | 2022 | கத்தி | 01 |
| 24. | S/176 | F | 2023 | கத்தி | 01 |
| 25. | 23872 | WL | 2017 | கத்தி | 01 |
| 26. | 31775 | PC | 2022 | கத்தி | 01 |
| 27. | 22149 | F | 2016 | கத்தி | 01 |
| 28. | 29361 | F | 2020 | கத்தி | 01 |
| 29. | S/40 | F | 2022 | கத்தி | 01 |
| 30. | 26309 | F | 2019 | கத்தி | 01 |
| 31. | 29975 | F | 2021 | கத்தி | 01 |
| 32. | 31055 | F | 2022 | கத்தி | 01 |
| 33. | 17353 | F | 2013 | கத்தி | 02 |
| 34. | 21636 | WL | 2016 | கத்தி | 01 |
| 35. | 23403 | F | 2017 | கத்தி | 01 |
| 36. | 31058 | F | 2022 | கத்தி | 02 |
| 37. | 28913 | F | 2020 | கத்தி | 02 |
| 38. | 31131 | ODD | 2022 | கத்தி | 01 |
| 39. | S/76 | F | 2022 | கத்தி | 01 |
| 40. | S/411 | F | 2023 | கோடரி | 01 |
| 41. | 31938 | F | 2022 | கோடரி | 01 |
| 42. | S/227 | F | 2023 | கோடரி | 01 |
| 43. | S/193 | F | 2023 | கோடரி | 02 |
| 44. | 33602 | PC | 2024 | கோடரி | 01 |
| 45. | S/415 | F | 2023 | கோடரி | 02 |
| 46. | S/246 | F | 2023 | கோடரி | 01 |
| 47. | S/360 | F | 2023 | கோடரி | 01 |
| 48. | 31055 | F | 2022 | கோடரி | 01 |
| 49. | S/425 | F | 2023 | மண்வெட்டி | 01 |
| 50. | 24398 | MT | 2018 | மண்வெட்டி | 02 |
| 51. | S/414 | F | 2023 | மண்வெட்டி | 01 |
| 52. | 31776 | PC | 2022 | மண்வெட்டி | 01 |

| தொடர் இலக்கம் | வழக்கிலக்கம் | | பொருள் விபரம் | எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| 53. | S/412 | F | 2023 | மண்வெட்டி | 01 |
| 54. | S/386 | F | 2023 | மண்வெட்டி | 01 |
| 55. | S/499 | PC | 2024 | மண்வெட்டி | 01 |
| 56. | 30960 | PC | 2021 | வாளி | 02 |
| 57. | 21980 | PC | 2016 | வாளி | 01 |
| 58. | 19933 | PC | 2014 | வாளி | 01 |
| 59. | 17736 | PC | 2013 | வாளி | 02 |
| 60. | 28480 | EX | 2020 | அலுமினிய சட்டி | 01 |
| 61. | 30652 | E | 2021 | சில்வர் பேசன் | 01 |
| 62. | AR/5482 | WL | 2018 | அலவாங்கு | 01 |
| 63. | 29088 | F | 2020 | அலவாங்கு | 01 |
| 64. | 30771 | PC | 2021 | அலவாங்கு | 01 |
| 65. | 29206 | F | 2020 | அலவாங்கு | 01 |
| 66. | S/413 | F | 2023 | குப்பைவாரி | 01 |
| 67. | S/227 | F | 2023 | பைசிக்கள் பம் | 01 |

06- 68

---

**நீதிவான் நீதிமன்றம்- மட்டக்களப்பு**

**பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்**

மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2024.07.06 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.00 மணிவரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களைப் பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம் மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏல விற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்கு பற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

D. அண்ணாத்துறை,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு,
2024.05.28.

**ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ள பொருட்கள் பற்றிய விபரம்**

| S.No. | CASE No. | REGISTRATION No. | CATEGORY | No. OF ITEMS |
|---|---|---|---|---|
| 1. | 63186/MT/2021 | EP-MF- 6849 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 2. | 64903/MT/2022 | EP-HV- 9195 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 3. | 68613/MT/2023 | EP-XI- 2293 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 4. | AR/1567/2023 | EP-JP- 9847 | மோட்டார் சைக்கிள் (பதிவு செய்ய முடியாது) | 01 |
| 5. | AR/1516/2023 | EP-BGV-8164 | மோட்டார் சைக்கிள் | 01 |
| 6. | AR/1518/2023 | EP-HH- 6717 | மோட்டார் சைக்கிள் (பதிவு செய்ய முடியாது) | 01 |
| 7. | AR/1402/2023 | EP-MC- 5903 | மோட்டார் சைக்கிள் (பதிவு செய்ய முடியாது) | 01 |
| 8. | AR/225/2024 | | தோணி | 01 |
| 9. | AR/225/2024 | | தோணி | 01 |
| 10. | AR/225/2024 | | தோணி | 01 |
| 11. | 68337/PC/2023 | | சிலிண்டர் | 01 |
| 12. | 72343/EX/2023 | | சிலிண்டர் | 01 |
| 13. | 72343/EX/2023 | | அடுப்பு | 01 |
| 14. | 73028/EX/2024 | | அடுப்பு | 01 |
| 15. | 64283/PC/2021 | | கையடக்கத்தொலைபேசி | 01 |
| 16. | AR/1513/2023 | | கையடக்கத்தொலைபேசி | 01 |
| 17. | 72135/S/2023 | | சவள் | 01 |
| 18. | 65372/S/2022 | | சவள் | 01 |
| 19. | 67682/S/2022 | | சவள் | 01 |
| 20. | 73797/S/2024 | | சவள் | 01 |
| 21. | 74056/S/2024 | | சவள் | 01 |
| 22. | B/610/2022 | | கோடாரி<br>அலவாங்கு | 01<br>01 |
| 23. | 67431/S/2022 | | கோடாரி<br>கத்தி | 01<br>01 |
| 24. | 70084/S/2023 | | கத்தி | 01 |

| S.No. | CASE No. | REGISTRATION No. | CATEGORY | No. OF ITEMS |
|---|---|---|---|---|
| 25. | B/610/2022 | | சவள்<br>மண்வெட்டி | 01<br>01 |
| 26. | AR/158/2024 | | வெற்று பரள் | 02 |
| 27. | AR/161/2024 | | வெற்று பரள் | 04 |
| 28. | AR/162/2024 | | வெற்று பரள் | 19 |
| 29. | AR/159/2024 | | வெற்று பரள் | 02 |
| 30. | AR/160/2024 | | வெற்று பரள் | 12 |
| 31. | AR/163/2024 | | வெற்று பரள் | 02 |
| 32. | AR/257/2024 | | வெற்று பரள் | 04 |
| 33. | AR/256/2024 | | வெற்று பரள் | 03 |
| 34. | AR/255/2024 | | வெற்று பரள் | 05 |
| 35. | AR/212/2024 | | வெற்று பரள் | 09 |
| 36. | NO NUMBER | | வெற்று பரள் | 40 |
| 37. | NO NUMBER | | பானை | 02 |
| 38. | NO NUMBER | | தாச்சி | 04 |
| 39. | NO NUMBER | | செப்பு பைப் துண்டுகள் | 35Kg |
| 40. | NO NUMBER | | ஊத்த மண் | 18 கியுப் |
| 41. | NO NUMBER | | ஆற்று மணல் | 16.75 கியுப் |

06- 69

---

## மூதூர் மாவட்ட நீதிவான் நீதிமன்றம்
## பகிரங்க ஏல விற்பனை - 2024.06.29

1. மூதூர் மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அரசுடமையாக்கப்பட்டதும் மற்றும் உரிமைகோரப்படாத பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை 2024.06.29 ஆந் திகதியன்று காலை 9.00 மணியளவில் நீதிமன்ற வளாகத்தில் நடாத்தப்படும்.

2. விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.

3. பகிரங் ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்கு உரிய விலை கிடைக்கப்பெறாதவிடத்து ஏலவிற்பனையிலிருந்து மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

4. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாக நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

5. பொருட்களைக் கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய அடையாள அட்டை கொண்டு வர வேண்டும்.

எச்.எம். தஸ்னீம் பௌஸான்,
மாவட்ட நீதிபதி/நீதிவான்.

மாவட்ட நீதிவான் நீதிமன்றம்,
மூதூர்.

| | | |
|---|---|---|
| 1. | River Sand- ஆற்று மணல் | 21 கியுப் |
| 2. | Soil- இரு மணல் | 09 கியுப் |
| 3. | Damaged Foot cycles- பழுதடைந்த துவிச்சக்கர வண்டி | 10 |
| 4. | Oxygen cylinders- ஒட்சிசன் சிலிண்டர் | 05 |
| 5. | Fishing floats- இபிள | 1000 |

06- 83

---

## நீதிவான் நீதிமன்றம்- சம்மாந்துறை
## பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மற்றும் உரிமைகோரப்படாத பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2024.06.29 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏல விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்ற பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணிமுதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது பெறுமதிக்கு குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம்மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன் போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
சம்மாந்துறை,
2024, யூன் 03.

ஏல விற்பனைக்கான சான்றுப் பொருட்களின் விபரப் பட்டியல்

| தொ.இல. | வழக்கிலக்கம் | வாகனப்பதிவு இல. | சான்றுப்பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| 01 | AR/3348/22 | EP HP - 2293 | மோட்டார் சைக்கிள் ( உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) | 01 | |
| 02 | AR/3483/23 | EP BDB -8345 | மோட்டார் சைக்கிள் | 01 | |
| 03 | 29313/Misc/23 | | இரும்பு வாளி | 01 | |
| 04 | 31580/Misc/24 | | இரும்பு வாளி | 04 | |

| தொ.இல. | வழக்கிலக்கம் | வாகனப்பதிவு இல. | சான்றுப்பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| 05 | 30770/Misc/24 | | இரும்பு வாளி | 01 | |
| 06 | 31692/Misc/24 | | இரும்பு வாளி | 01 | |
| 07 | 22956/Misc/19 | | இரும்பு வாளி | 01 | |
| 08 | 24558/Misc/20 | | இரும்பு வாளி | 04 | |
| 09 | No Number | | இரும்பு வாளி | 10 | |
| 10 | 31580/Misc/24 | | சவள் | 02 | |
| 11 | 31692/Misc/24 | | சவள் | 01 | |
| 12 | 30770/Misc/23 | | சவள் | 01 | |
| 13 | 22956/Misc/19 | | சவள் | 01 | |
| 14 | 22574/Misc/19 | | சவள் | 02 | |
| 15 | 23429/Misc/19 | | சவள் | 01 | |
| 16 | 24558/Misc/20 | | சவள் | 02 | |
| 17 | No Number | | சவள் | 05 | |
| 18 | B/5672/21 | | சவள் | 01 | |
| 19 | 24978/Misc/20 | | சவள் | 01 | |
| 20 | 24366/Misc/20 | | சவள் | 01 | |
| 21 | AR/3108/22 | | கையடக்கத் தொலைபேசி | 01 | |
| 22 | AR/2132/19 | | கையடக்கத் தொலைபேசி | 03 | |
| 23 | 29128/Misc/23 | | மேசைத் தராசு | 01 | |
| 24 | 29134/Misc/24 | | இலத்திரனியல் தராசு | 01 | |
| 25 | 29127/Misc/24 | | மேசைத் தராசு | 01 | |
| 26 | 31177/E/24 | | சிலிண்டர் | 01 | |
| 27 | 31177/E/24 | | அடுப்பு | 01 | |
| 28 | 31177/E/24 | | தாச்சி | 01 | |
| 29 | 31602/F/24 | | கிரைண்டர் | 01 | |
| 30 | 31602/F/24 | | சுத்தியல் | 01 | |

| தொ.இல. | வழக்கிலக்கம் | வாகனப்பதிவு இல. | சான்றுப்பொருட்களின் விபரம் | எண்ணிக்கை | |
|---|---|---|---|---|---|
| 31 | 31602/F/24 | | கைவாள் | 01 | |
| 32 | 31602/F/24 | | உளி | 02 | |
| 33 | 31602/F/24 | | L. அடிமட்டம் | 01 | |
| 34 | 31602/F/24 | | மர வரை தட்டு | 01 | |
| 35 | 31603/F/24 | | கைவாள் | 01 | |
| 36 | 31603/F/24 | | மரச் சுத்தியல் | 01 | |
| 37 | 31603/F/24 | | உளி | 01 | |
| 38 | 31603/F/24 | | L. அடிமட்டம் | 01 | |
| 39 | 31603/F/24 | | கிரைண்டர் | 01 | |
| 40 | 31603/F/24 | | அளவு நாடா | 01 | |
| 41 | AR/189/24 | | வெற்று கலன்கள் | 09 | |
| 42 | River Sand | | 15 கியூப் | | 2800.00 Per cube |
| 43 | Dirty Soil | | 21 கியூப் | | 800.00 Per cube |

06- 96

## ஆய விற்பனையும் குத்தகையும்

**2025 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடல்**

கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவு

*1982, ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டிற்கும் அதன் பின்னரான காலப்பகுதிகளுக்கும் செல்லுபடியான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கும், அக்காலப் பகுதியில் செயற்படுத்தப்படும் சகல மதுவரி நிபந்தனைகட்கும் உட்பட்டு 2025 ஆம் ஆண்டின் கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளில் சில்லறைக்கு கள்ளு விற்பனை செய்யும் தனியுரிமை கொள்வனவிற்காக கொத்மலை பிரதேச செயலாளரினால் 2024.08.06ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

2. (அ) சகல கேள்விப் பத்திரங்களும் இத் தீவில் உள்ள எந்தவொரு பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக் கொள்ளப்படும் குறிப்பிட்ட விண்ணப்பப்படிவத்தில் மாத்திரமே அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) கேள்விப் பத்திரத்துடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைப் பணத்தினை ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்திப் பெற்றுக் கொண்ட உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு இணைக்கப் படல் வேண்டும்.

(இ) கேள்விதாரரின் காணி நிலம் போன்ற அசைவற்ற ஆதனங்கள் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்கள் பற்றிய சான்றிதழை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துச் சான்றிதழ்களை சமர்ப்பித்தல் தொடர்பில் மேற்குறிப்பிட்ட கள்ளுத் தவறணைகளினது குத்தகை நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகள் முறையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் என கேள்விதாரருக்கு அறிவிக்கப் படுகின்றது.

(ஈ) கேள்விப்பத்திரத்தை நிரப்பும் போது கீழ்வரும் விடயங்களை கேள்விதாரர் கருத்திற்கொள்ளல் வேண்டும்.

a. கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்பட்டு கேள்வித்தொகை எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்;

b. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடும் சாட்சியாளர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும்;

c. பத்திரத்தில் திருத்தங்கள் செய்யப்படின் /வெட்டப்படின் அவ் ஒவ்வொரு இடத்திலும் கேள்விதாரர் முழுமையாக கையொப்பத்தையும் திகதியையும் இடல் வேண்டும்;

d. அனைத்து கேள்விதாரரும் தமது தேசிய அடையாள அட்டையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை கேள்விப்பத்திரத் துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

மேற் குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரம், பிணைப் பணம் செலுத்திய உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு, சொத்து சான்றிதழ் ஆகியவற்றுடன் கடித உறையினுள் இட்டு முத்திரையிட்டு, அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தவறணையின் பெயர், இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதிக்கு முன் கொத்மலை பிரதேச செயலக கேள்விப்பத்திர பெட்டியில் இடல் வேண்டும். கேள்விப் பத்திரத்தை பதிவுத் தபாலில் அனுப்புவதாயின் இறுதித் திகதியின் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னராக "பிரதேச செயலாளர், கொத்மலை பிரதேச செயலகம், கொத்மலை" என்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

4. கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரம் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந் நேரத்திற்கு கேள்விதாரர் பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உரித்தாகும்.

6. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விதாரர் கொள்வனவாளராக அறிவிக்கப்பட்டவுடன், அன்றைய தினம் பி.ப. 2.00 மணிக்கு முன்னர் பிணை வைப்புத் தொகையாக கொத்மலை பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்படக்கூடிய, 03 தவணைகளுக்கு குறை யாத தொகையை பிணை வைப்புத் தொகையாக கொத்மலை பிரதேச செயலாளருக்கு வைப்பிலிடல் வேண்டும். மேற்படி வைப்பை பூண்டுலோயா மக்கள் வங்கியில் ஒரு வருட நிலையான வைப்புக் கணக்கில் வைத்திருப்பதற்கு கேள்விதாரர் இணக்கம் தெரிவித்தல் வேண்டும். இவ் வைப்பை பணம் மூலமாகவோ அல்லது வங்கி மூலமாகவோ செலுத்துவதென குறிப்பிடப்பட்டுள்ள காசோலை மூலமாகவோ அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் வழங்கப்படும் பாதுகாப்பான காசுக்கட்டளை மூலமாகவோ செலுத்தல் வேண்டும்.

7. தேவையான முத்திரை போன்றவற்றைச் சமர்ப்பித்து செலுத்தி குத்தகைதாரர் நிபந்தனைகளிலும், ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடல் வேண்டும்.

8. இணக்கம் தெரிவிக்கப்படும் கேள்வித்தொகையை தவணைகளாக பணமாக செலுத்தக் கூடியவர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

9. கேள்விப் பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியும் வேறு வேறாக தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

10. ஏதாவதொரு தவறணை குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாதவிடத்து 2024.09.03ஆந் திகதி மு.ப 10.30 மணிக்கு இவ்விடத்தில் மீண்டும் குத்தகைக்கு விடப்படும்.

11. இக்குத்தகை வழங்கல் தொடர்பிலான இறுதித் தீர்மானம் எனது தீர்மானமாக அமையும்.

12. குத்தகைக்கு விடல் , உரிய நிபந்தனைகள் மற்றும் ஏனைய மேலதிக விபரங்களை கொத்மலை பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர்.ஏ.நதீர லக்மால்,
பிரதேச செயலாளர்,
கொத்மலை.

பிரதேச செயலகம்,
கொத்மலை,
2024, மே 29.

**அட்டவணை**

| *இலக்கமும் தவறணையின் பெயரும்* | *தவறணை அமைந்துள்ள இடம்* | *கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி* | *கேள்விப்பத்திர பிணைப் பணம் ரூபா* |
|---|---|---|---|
| கள்ளுத் தவறணை இலக்கம் 1 கடதொரப்பிட்டிய | கடதொரப்பிட்டிய கிராமம் | 2024.08.06 ஆந் திகதி மு.ப. 10.30 மணி | 5,000.00 |
| இலக்கம் 2 ஒத்தலாவ | தேர்ந்தெடுக்கப்படும் இடத்திற்கு கொத்மலை பிரதேச செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப் பட்ட கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | 2024.08.06ஆந் திகதி மு.ப. 10.30 மணி | 5,000.00 |
| இலக்கம் 3 கட்டுகித்துல | கட்டுகித்துல கிராமம் | 2024.08.06ஆந் திகதி மு.ப .10.30 மணி | 5,000.00 |

06-70/2

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

டிஜிட்டல் மொபைலிட்டி சொலூஷன்ஸ் லங்கா ( பிரைவேட்) லிமிடெட்டின் ("கம்பனி") அந்தஸ்தில் ஏற்பட்ட மாற்றம் சம்பந்தமாக பங்குதாரர்களால் நிறைவேற்றப்பட்ட ஒரு விசேட தீர்மானத்தை தொடர்ந்து கம்பனியின் பெயர் பின்வரும் முறையில் 2024, மே 07 ஆந் திகதியிலிருந்து மாற்றப்பட்டது பற்றி 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் (திருத்தப்பட்டவாறு) விதிகளுக்கு ஏற்ப இத்தால் அறிவித்தல் தரப்படுகிறது.

*புதிய பெயர்:* டிஜிட்டல் மொபைலிட்டி சொலூஷன்ஸ் லங்கா லிமிடெட்
*முன்னைய பெயர்:* டிஜிட்டல் மொபைலிட்டி சொலூஷன்ஸ் லங்கா ( பிரைவேட்) லிமிடெட்
*கம்பனியின் இலக்கம்:* PV 103441

*கம்பனியின் பதிவு அலுவலக முகவரி:* இலக்கம் 309, ஹைலெவல் வீதி, கொழும்பு 05

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எஸ்எஸ்பி கோப்பரேற் சேர்விசெஸ் (பிரைவட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்.

06- 65

---

**பனோாஸ் இன்ஸ்ரியூட் சவுத் ஏசியா**
**(அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைத்தலில் உள்ளது)**
**கம்பனியின் பதிவு இல.GA 77**

## கம்பனியின் இறுதிப் பொதுக்கூட்டத்தில் கலைத்தலுக்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 331(2) ஆம் பிரிவிற்கமைவாக மேற்படி கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் இலக்கம் 11, காசல் ஒழுங்கை, கொழும்பு 4 இல் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தல் பற்றிய விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அ-து,

1. ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது.
2. கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை மற்றும்
3. இவை பற்றிய விளக்கம் அளித்தல்.

ஜெராட் ஜீவானந்தன் டேவிட்,
கலைப்பாளர்,

பனோாஸ் இன்ஸ்டிரியூட் சவுத் ஏசியா,
இலக்கம் 11, 3 ஆம் மாடி,
காசல் ஒழுங்கை, கொழும்பு 4.

2024, யூன் 03.

06- 67

---

**நிலோனா லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்**

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவிற்கமைய கம்பனியொன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு தொடர்பான பகிரங்க அறிவித்தல்

*கம்பனியின் பெயர்:* நிலோனா லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்:* பீவீ 14543
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி:* ஒருவல, அதுருகிரிய
*குறைப்பின் முன் கூறப்பட்ட மூலதனம்:* ரூ. 733, 150, 020.00
*குறைப்பின் பின் கூறப்பட்ட மூலதனம்:* ரூ. 618, 600, 020.00
*குறைக்கப்பட்ட பெறுமானம்:* ரூ. 114, 550, 000.00

சரவணன் நீலகண்டன்,
பணிப்பாளர்,
எஸ். என்.கோ. கர்ப்பரேட் செக்ரட்டரீஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்,
( கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்),

எச்கியூ கொழும்பு ( நிலை 4),
இல. 464ஏ,
டி.பி. ஜயா மாவத்தை,
கொழும்பு 10.

06- 81

## நிலோனா லொஜஸ்டிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவிற்கமைய கம்பனியொன்றின் கூறப்பட்ட மூலதனத்தின் குறைப்பு தொடர்பான பகிரங்க அறிவித்தல்

*கம்பனியின் பெயர்:* நிலோனா லொஜஸ்டிக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்:* பீவீ 00207201
*கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி:* ஒருவல, அதுருகிரிய
*குறைப்பின் முன் கூறப்பட்ட மூலதனம்:* ரூ. 281, 527, 000.00
*குறைப்பின் பின் கூறப்பட்ட மூலதனம்:* ரூ. 174, 501, 000.00
*குறைக்கப்பட்ட பெறுமானம்:* ரூ. 107, 026, 000.00

சரவணன் நீலகண்டன்,
பணிப்பாளர்,
எஸ்.என்.லோ.கர்ப்பரேட் செக்ரட்டரீஸ்
(பிரைவேட்) லிமிட்டெட்,
(கம்பனியின் கம்பனிச் செயலாளர்கள்).

எச்கியூ கொழும்பு ( நிலை 4),
இல. 464ஏ,
டி.பி. ஜயா மாவத்தை,
கொழும்பு 10.

*06- 82*

---

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமுடைய கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் 2024.03.06 ஆந் திகதி முதல் பின்வரும் கம்பனியின் பெயர்மாற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*கம்பனியின் முன்னைய பெயர்:* அக்சன்லங்கா கொம் (பிரைவேட்) லிமிடெட்
*கம்பனியின் புதிய பெயர்:* அக்சன் லங்கா (பிரைவேட்) லிமிடெட்
*கம்பனியின் இலக்கம்:* PV 6875
*பதிவு முகவரி:* இல. 366/ 3, றேந்தபொல, ஹோகந்தர வீதி, தளங்கம வடக்கு, கொஸ்வத்த

கோப்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*06- 89*

---

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 320(1) ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்
## மோதா இன்வெஸ்ட்மண்ட்ஸ் கொர்பரேஷன் (பிரைவேட்) லிமிடெட்
## நிறுவனத்தின் இல. : பீவீ 13873
## அங்கத்தவர்களின் தன்னிச்சையான கலைப்பு

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 320(1) ஆம் பிரிவின்படி, இலக்கம் 09, 3 ஆவது மாடி, பள்ளிப்பாதை, கொழும்பு-03 இல் நடைபெற்ற நிறுவனத்தின் அசாதாரண பொதுக் கூட்டத்தில் ஒரு சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. 2024, யூன் மாதம் 05 ஆந் திகதியன்று நிறுவனத்தின் கடனாளர்களின் தன்னார்வ முற்றுப்புள்ளியாக மூடுவதற்கு மற்றும் இலக்கம் 09, 03 ஆவது மாடி, பள்ளிப்பாதை, கொழும்பு 03 இன் பட்டயக்கணக்காளர் திரு. விதான ஆராச்சிலாகே சானக புஷ்பகுமார அவர்கள் கலைப்பாளராக 2024, யூன் மாதம் 05 ஆந் திகதி நியமிக்கப்படுவார்.*

*உறுப்பினர்களின் தன்னார்வ கலைப்பு நோக்கங்களுக்காக தயாரிக்கப்பட்ட சட்டபூர்வ பிரகடனத்தை சமர்ப்பிப்பதில் தாமதம் காரணமாக, உறுப்பினர்களிடமிருந்து கடன் வழங்குபவர்கள் தன்னார்வ கலைப்பு நிலைக்கு மாறியதன் காரணமாக 2024, மாச்சு*

மாதம் 15 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட அதே தலைப்பு தொடர்பான பொது அறிவிப்பு இதன் மூலம் இரத்து செய்யப்படுகிறது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். நிறுவனங்களின் பதிவாளர் மற்றும் இந்த அறிவிப்பின் விளைவுடன், கலைப்பு கடன் வழங்குபவர்கள் தன்னார்வ தலைப்பாக மாறியுள்ளது.

திரு. விதான ஆராச்சிலாகே சானக புஷ்பகுமார்,
கலைப்பாளர்.

இலக்கம் 09, 03 ஆவது மாடி,
பள்ளிப்பாதை, கொழும்பு 03.

06- 91/1

---

**2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் பிரகாரமான அறிவித்தல்**

**மோதா இன்வெஸ்ட்மண்ட்ஸ் கொர்பரேஷன் (பிரைவேட்) லிமிடெட்**
**நிறுவனத்தின் இல. : பீவீ 13873**

**கலைப்பாளரை நியமிப்பதற்கான அறிவிப்பு**

2024 ஆம் ஆண்டு யூன் மாதம் 05 ஆந் திகதி நடாத்தப்பட்ட இக்கம்பனியின் விசேட மகாசபைக் கூட்டத்தில் மோதா இன்வெஸ்ட்மண்ட்ஸ் கொர்பரேஷன் (பிரைவேட்) லிமிடெட் கம்பனியின் கலைப்பாளராக விசேட பிரேரணை நிறைவேற்றப்பட்டதன் மூலம் பட்டய கணக்காளரான விதான ஆராச்சிலாகே சானக புஷ்பகுமார ஆகிய நான், நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை இலக்கம் 09, 03 ஆவது மாடி, பள்ளிப்பாதை, கொழும்பு 03 எனும் இடத்தைச் சேர்ந்த நான் அறிவிக்கின்றேன்.

திரு. விதான ஆராச்சிலாகே சானக புஷ்பகுமார்,
கலைப்பாளர்.

இலக்கம் 09, 03 ஆவது மாடி,
பள்ளிப்பாதை, கொழும்பு 03.

06- 91/2

---

# அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

**2025 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விடல்**
கொத்மலை பிரதேச செயலாளர் பிரிவு

1982 , ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 1983 ஆம் ஆண்டிற்கும் அதன் பின்னரான காலப்பகுதிக்கும் செல்லுபடியான வெளிநாட்டு மதுபான வகை (தானியங்களைக் கொண்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபான வகைகள் உட்பட) தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கும் அக் காலப்பகுதியில் செயற்படுத்தப்படும் சகல மதுவரி நிபந்தனைகளுக்கும் உட்பட்டு 2024 ஆம் ஆண்டில் கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வெளிநாட்டு மதுபானங்களை (தானியங்களைக் கொண்டு உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபான வகைகள் உட்பட) சில்லறையில் விற்பனை செய்யும் தனியுரிமை கொள்வனவிற்காக கொத்மலை பிரதேச செயலாளரினால் 2024.08.06 ஆந் திகதி மு.ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. (அ) சகல கேள்விப் பத்திரங்களும் இத் தீவில் உள்ள எந்தவொரு பிரதேச செயலகத்தில் இருந்தும் பெற்றுக்கொள்ளப்படும் குறிப்பிட்ட விண்ணப்பப்படிவத்தில் மாத்திரமே அனுப்பப்படல் வேண்டும்.

(ஆ) கேள்விப் பத்திரத்துடன் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிணைப் பணத்தினை ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்திப் பெற்றுக் கொண்ட உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு இணைக்கப்பட வேண்டும்.

(இ) கேள்விதாரரின் காணி, நிலம் போன்ற அசைவற்ற ஆதனங்கள் அமைந்துள்ள பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சொத்துக்கள் பற்றிய சான்றிதழை கேள்விப்பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரம் மற்றும் சொத்துச் சான்றிதழ்களை சமர்ப்பித்தல் தொடர்பில் மேற்குறிப்பிட்ட வெளிநாட்டு மதுபானசாலைகளினது குத்தகை நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள விதிமுறைகள் முறையாக கடைப்பிடிக்கப்பட வேண்டும் என கேள்விதாரருக்கு அறிவிக்கப்படுகின்றது.

(ஈ) கேள்விப்பத்திரம் நிரப்பும் போது கீழ்வரும் விடயங்களை கேள்விதாரர் கருத்தில் கொள்ள வேண்டும்.

a. கேள்விப்பத்திரம் முழுமையாக நிரப்பப்பட்டு கேள்வித்தொகை எழுத்திலும், இலக்கத்திலும் குறிப்பிடப்பட வேண்டும்.

b. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தில் கையொப்பமிடும் சாட்சியாளர்களின் தேசிய அடையாள அட்டை இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும்.

c. பத்திரத்தில் திருத்தங்கள் செய்யப்படின் /வெட்டப்படின் அவ் ஒவ்வொரு இடத்திலும் கேள்விதாரர் முழுமையான கையொப்பத்தையும் திகதியையும் இட வேண்டும்.

d. அனைத்து கேள்விதாரரும் தமது தேசிய அடையாள அட்டையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை கேள்விப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரத்தை பிணைப் பணம் செலுத்திய உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டு, சொத்து சான்றிதழ் ஆகியவற்றுடன் கடித உறையினுள் இட்டு, முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தவறணையின் பெயர், இலக்கம் என்பவற்றை குறிப்பிட்டு கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய இறுதித் திகதிக்கு முன் கொத்மலை பிரதேச செயலக கேள்விப்பத்திர பெட்டியில் இடல் வேண்டும். கேள்விப்பத்திரத்தை தபாலில் அனுப்புவதாயின் இறுதித் திகதியில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னராக "பிரதேச செயலாளர், கொத்மலை பிரதேச செயலகம், கொத்மலை " என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி நேரம் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த நேரத்திற்கு கோள்விதாரர் பிரதேச செயலகத்துக்கு சமுகமளித்திருத்தல் வேண்டும்.

5. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு உரித்தாகும்.

6. தேர்ந்தெடுக்கப்படும் கேள்விதாரர் கொள்வனவாளராக அறிவிக்கப்பட்டவுடன், அன்றைய தினம் பி.ப 2.00 மணிக்கு முன் பிணை வைப்புத் தொகையாக கொத்மலை பிரதேச செயலாளரினால் தீர்மானிக்கப்படக்கூடிய 3 தவணைகளுக்கு குறையாத தொகையை கொத்மலை பிரதேச செயலாளருக்கு வைப்பிலிடல் வேண்டும். மேற்படி வைப்பை பூண்டுலோயா மக்கள் வங்கியில் ஒரு வருட நிலையான வைப்புக் கணக்கில் வைத்திருப்பதற்கு கேள்விதாரர் இணக்கம் தெரிவித்தல் வேண்டும். இவ்வைப்பை பணம் மூலமாகவோ அல்லது வங்கி மூலமாகவோ செலுத்துவதென குறிப்பிடப்பட்ட காசோலை மூலமாகவோ அல்லது இலங்கை வங்கி அல்லது மக்கள் வங்கியினால் வழங்கப்படும் பாதுகாப்பான காசுக்கட்டளை மூலமாகவோ செலுத்துதல் வேண்டும்.

7. தேவையான முத்திரை போன்றவற்றை சமர்ப்பித்து குத்தகைதாரர் நிபந்தனைகளிலும் , ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடல் வேண்டும்.

8. இணக்கம் தெரிவிக்கப்படும் கேள்வித் தொகையை தவணைகளாக பணமாகச் செலுத்தக் கூடியவர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

9. கேள்விப் பத்திரம் கூட்டாக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களில் ஒவ்வொருவருடைய பிரத்தியேக முகவரியும் வேறு வேறாக தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

10. ஏதாவதொரு வெளிநாட்டு மதுபான வகை தவறணையும் குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாதவிடத்து 2024.09.03 ஆந் திகதி மு.ப.10.30 மணிக்கு இவ்விடத்தில் மீண்டும் குத்தகைக்கு விடப்படும்.

11. இக்குத்தகை வழங்கல் தொடர்பிலான இறுதித் தீர்மானம் எனது தீர்மானமாக அமையும்.

12. குத்தகைக்கு விடல் , உரிய நிபந்தனைகள் மற்றும் ஏனைய மேலதிக விபரங்களை கொத்மலை பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஆர்.ஏ. நதீர லக்மால்,
பிரதேச செயலாளர்,
கொத்மலை.

பிரதேச செயலகம்,
கொத்மலை,
2024, மே 29.

**அட்டவணை**

| இலக்கமும் தவறணையின் பெயரும் | தவறணை அமைந்துள்ள இடம் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி | கேள்விப்பத்திர பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|
| வெளிநாட்டு மதுபான தவறணை, இல.2, பூண்டுலோயா. | பூண்டுலோயா நகரம், மேல் கடை வீதி. | 2024.08.06 ஆந் திகதி மு.ப. 10.30 மணி | 5,000.00 |

06-70/1